**தேசிய அறிவாற்றல் ஆலோசனைக் குழுமத்தின், மின்னாட்சி நிர்வாகம் பற்றிய பரிந்துரைகள்**

மின் அணு நிர்வாகம் பற்றி ஆய்வு செய்ய சிறப்புக் குழு ஒன்றை நந்தன் நீலகேணியின் தலைமையில் என்கேசி அமைத்தது. இக்குழுவின் அறிக்கை, திட்டக் கமிஷனில் விவாதிக்கப்பட்டு பின்னர் தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சரிடம் வழங்கப்பட்டது. இதன்பின், இந்த விஷயத்தில் பங்குபெறும் நிர்வாகச் சீரமைப்புக் குழுமம் உள்ளிட்ட பிற துறைகளைச் சேர்ந்தவர்களுடன் விவாதங்கள் நடைபெற்றன. இத்தகைய விவாதங்களின் அடிப்படையில், மின்னணு நிர்வாகம் என்பது மின்னணு, தகவல் தொழில் நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பைப் பற்றியது மட்டுமின்றி நிர்வாக சீரமைப்புகளுக்கு மிகவும் உதவக்கூடியது என்பதை என்கேசி உணர்ந்துகொண்டது. இதன் அடிப்படையில் அமைந்த என்கேசியின் பரிந்துரைகள் பெரும்பாலும் நடைமுறைகள், அலுவலக திட்டங்கள், உள்கட்டமைப்பு மற்றும் நிறுவனம் ஆகியவற்றோடு தொடர்புடையதாகவே இருந்தன. அவை பின்வருமாறு;

(1) கணினிமயமாக்கலுக்கு முன்பு, நடைமுறை சீர்திருத்தங்களை உருவாக்குவது அரசின் முதல் கவனமாக இருக்க வேண்டும். காலங்காலமாக பிரிட்டிஷ் அரசாங்கம் விட்டுச் சென்ற மிகப் பழமையான நடைமுறை வழக்கங்களை மின்னணு நிர்வாகம் என்ற பெயரில் கணிணி மயமாக்கும் முயற்சிகள்தான் தற்பொழுது நடக்கின்றன.. ஆங்கிலேயருக்குப் பிறகு வந்த இந்திய அரசு அதிகாரிகள் தங்களது துறைகளை மட்டுமே கருத்தில் கொண்டு ஏற்படுத்திய நிர்வாக நடைமுறைகளும் இதில் அடங்கும். இதன் விளைவாக, மிகச் சிக்கலான நடைமுறைகளையும் அதனாலேயே அவற்றின் பயன்களை அறிய முடியாததாக இருப்பவற்றையுமே நாம் ணினிமயமாக்கிக்கொண்டிருக்கிறோம். ஏற்கனவே இருக்கும் அரசுத் துறைகளின் நடைமுறைகளைக் கணினி மயமாக்குவதால், மேலும் அதிகப்படியான செலவு, கூடுதல் சிக்கல், காலதாமதம் மற்றும் குழப்பநிலை ஆகியவைதான் அதிகமாகிறது. ஆகவே, பிரிட்டிஷ் ஆட்சி முறைப் பழக்கங்களை ஒதுக்கிவிட்டு, அரசின் செயல்பாட்டு நடைமுறைகளை நவீனப்படுத்திப் புதிய முறைகளை உருவாக்க, இப்போது இந்திய சரித்திரத்தில் நிகரற்ற வாய்ப்பு உள்ளதாகவும் இதன் மூலம் 21ஆம் நூற்றாண்டில் புதிய இந்தியாவை உருவாக்க முடியும் என்றும் என்கேசி கருதுகிறது.

காலனி ஆதிக்க காலத்தில் இருந்த நம்பிக்கையின்மை மற்றும் அடக்கியாளும் முறைகளை ஒழித்துவிட்டு, அரசு செயல்படுத்தும் நடைமுறைகளுக்கு மறுவடிவம் அளிப்பது மிகவும் அவசியமாகும். இந்த புதிய முறையில் குடிமக்களை மையமாக வைத்து, தொழில்துறையினர், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோர் தங்களுக்குத் தேவையான அரசு நடைமுறைகளை எளிய முறையில் நிறைவேற்றிக்கொள்ளும்படியாகச் சீரமைக்க வேண்டும். அதன் காரணமாக, அரசின் சேவைகளை மக்கள் பெறும் சிரமம் குறைவது மட்டுமல்லாமல், அதற்கான நேரமும் பெருமளவில் குறையும். இதனால் ஆவணங்களைக் கண்டுபிடிக்க முடிவதுடன், தனிநபரின் வேலைத்திறன், பொறுப்பேற்கும் நிலை, திறமை மற்றும் உற்பத்தித்திறன் போன்றவைகளை அதிகரிக்கலாம். மேலும், அரசின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் தெளிவும் ஏற்படும்.

**(2) 10-20 முக்கிய நடைமுறைகள் மற்றும் சேவைகள்**

மக்கள் மத்தியில் உடனடித் தாக்கம் ஏற்படுத்தும் வேண்டுமானால், சிக்கலானதாக, அரசு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட, தேவையற்ற தாமதங்கள் மற்றும் லஞ்ச முறையை உருவாக்கும் மிக முக்கியமான 10-20 நடைமுறைகள் மற்றும் சேவைகளை அடையாளம் காணவேண்டியது அவசியமாகும். இந்த நடைமுறைகளை எளிமைப்படுத்தி இவற்றை இணையதளச் சேவைகளாக மாற்றலாம். தொடக்கத்தில், இத்தகைய சேவைகளில் பிறப்பு/இறப்புச் சான்றிதழ், வீட்டு விலாசச் சான்றிதழ் மற்றும் பொதுவிநியோக அட்டைகள்/அடையாள அட்டைகள் போன்றவைகளைப் பெறுமாறு செய்யலாம். இந்த அணுகுமுறை, ஒவ்வொரு மாநிலமும், ஒன்று போல அமல் செய்ய வேண்டியதாக இருக்கும். இது மட்டுமின்றி இவைகளை செயல்படுத்தும் போது எழும் பிரச்சிகைளிலிருந்து புதிய விஷயங்களைப் பரஸ்பரம் கற்றுக்கொள்ளவும் முடியும்.

**(3) பொதுவான தர நிர்ணயங்கள்**

இப்போதைய நிலவரப்படி, ஒவ்வொரு மாநிலமும், அந்தந்த அரசும் செயல்பாடுகளில் சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றை கணினிமயமாக்கி, அதன்மூலம் மின்னணு நிர்வாகத்தை வழங்ககின்றன. இவற்றில் பல திட்டங்கள், வியாபாரிகளைச் சார்ந்தே இருப்பதால் அவற்றை அளவிடுவதும் சுலபமல்ல. தேர்தல்களில் வாக்களிப்பது, வரிகள், சானிறிதழ்கள், வியாபாரம், சட்ட திட்டங்களை அமலாக்குதல், தனிநபர் நலத் திட்டங்கள், நிலம், நிறுவனங்கள் மற்றும் தொழிலகங்களின் சொத்து விவகாரங்கள் ஆகியவற்றில் அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அமைச்சகங்கள் ஒரே விதமான தர நிர்ணயங்களை உருவாக்கி, அவற்றைக் குடிமக்கள் மற்றும் தொழில் துறையினருக்குப் பயனளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்துவது மிக முக்கியமாகும்.

இத்தகைய தர நிர்ணயங்கள் வன்பொருள்/வியாபாரிகளைச் சார்ந்திருக்காமல், எந்த ஒரு மாநிலமோ, பஞ்சாயத்து அமைப்புகளோ, தொழில்துறையோ, அரசுசார்பற்ற அமைப்புகளோ அல்லது சாதாரணக் குடிமகனோ, தங்களுக்குத் தேவைப்படும்போது, உபயோகிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அரசுத்துறைகள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி/வளர்ச்சி நிறுவனங்கள் ஆகியற்றைச் சேர்ந்த வல்லுநர்கள் மற்றும் பயனடைவோர்கள், நவீனகால நடைமுறை பற்றி அறிந்தவர்கள், தொழில்நுட்பம், மென்பொருள் தொழில் நுட்பப் பயனாளிகளுடன் நேரடித் தொடர்பு வைத்திருப்பார்கள் ஆகியவர்களால் இந்தத் தரநிர்ணயங்கள், மாதிரிகள் மற்றும் விவரத் தொகுப்பு மாதிரிகள் உருவாக்கப்பட வேண்டும்.

மாநிலங்கள் அனைத்தும் இத்தரநிர்ணயங்களையே பின்பற்றவேண்டும் என்று என்கேசி வலியுறுத்துகிறது. அதே நேரத்தில் மாநில அரசுகள் ஏற்கெனவே பின்பற்றி வரும் சில தர நிர்ணயங்களையும் உள்ளடக்கிக் கொள்வதன் தேவையும் என்கேசி உணர்ந்திருக்கிறது.

(4) கடந்த காலத்தில் கடைபிடித்துவந்த சிறந்த நடைமுறைகள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள்: கணிசமான அளவிலான பணிகள் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களிலும், மாநில அரசுகளிலும் ஏற்கெனவே நடைபெற்றுள்ளன. இவற்றிலிருந்து கற்றுக்கொண்டு, சிறந்த நடைமுறைகளைத் தேசிய அளவில் ஒத்துப்போகக்கூடிய அளவிலும், குறைந்த செலவுடனும், பயனாளிகள் எளிதில் பயன்படுத்தக்கூடிய வகையிலும் அமைப்பது முக்கியாமாகும்.

அரசின் பல அலுவலகங்களில், ஆய்வுக்கூடங்களில், இயக்குனரகங்களில், மிகவும் உபயோகமன மற்றும் தொடர்புடைய பல விஷயங்களைப் பற்றிய பெரும் விவரத் தொகுதிகள் (உதாரணம்: தேசிய மண் விஞ்ஞானம் மற்றும் நில உபயோகத் திட்ட நிறுவனத்தில் ஏழு மையங்கள் - என்பிடிஸ்எஸ்எல்யுபி) இருப்பதாக என்கேசி கூறுகிறது. இவ்விவரங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு அனைவரின் உபயோகம் மற்றும் ஆய்வுக்கு உதவக்கூடியதான மாற்றப்பட வேண்டும். தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் வராதவரை, ஒரு துறை சேகரித்துள்ள விவரங்கள் அனைத்துத் துறைகள் மற்றும் பொதுமக்களுக்கும் கிடைக்குமாறு வழிவகை செய்ய வேண்டும்.

(5) **தேசிய உள்கட்டமைப்பு:**

பாதுகாப்பான மற்றும் அதிக அலைவரிசையுடைய உள்கட்டமைப்பும், அதனுடன் தேவையான வன்பொருள் (ஹார்ட்வேர்), மென்பொருள் மற்றும் நாடு முழுவதும் அனைத்து மட்டங்களிலும் இவற்றை இயக்க ஏதுவான வசதிகளையும் உருவாக்க வேண்டும். இந்த உள்கட்டமைப்பானது, பயனாளிகள் தேவையான சேவைக்குப் பணம் செலுத்துவது, அரசு மற்றும் தனியார்களின் கூட்டு முதலீடு, தவறுக்குப் பங்கேற்பது மற்றும் செயல்திறன் ஆகியவற்றைச் சார்ந்தே இருக்கும். இந்த திட்டத்தை உருவாக்குவதில் மத்திய அரசு வழிகாட்டியாக இருந்து செயல்பட்டால்தான், உயர்தரப் பாதுகாப்பு முறைகள், ஒரே சீரான முறை/தர நிர்ணயங்களை ஒவ்வொரு கட்டத்திலும் மொழி, பண்பாட்டு வேறுபாடுகள், சொத்துவிதிகள் மற்றும் நிதி ஆதார நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அமல்படுத்த முடியும்.

(6) இணையதளம் சார்ந்த சேவைகள்: தர்நிர்ணயங்களை அமல்படுத்தவும், சீரான வளைந்து கொடுக்கும்மற்றும் வெளிப்படையான முறையில் ஆட்சி முறை இருக்கவும், உள்ளூர் சம்பந்தப்பட்ட விவரங்கள் மற்றும் சேவைகளை அந்தந்த மொழிகளில் பெறும் வகையில் மாநில அரசுகள் மத்திய அரசின் மாதிரிகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வகை மாதிரியில், விவரங்களைப் பெறும் முறைகள்/கட்டணங்கள் பெறும் தொழில் முறைக்கான உள்கட்டமைப்பை உருவாக்குவதில் தனியார் முதலீடு செய்வதும், அதில் வரும் வருமானத்தைத் தொடர்புடைய அனைத்து தரப்பினரும் பெற்று, தங்களது பங்கை ஆற்றவும் முடியும். மேலும், இந்த முறை நீடிக்குமேயானால் தொடர்ந்து எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்றவாறு மாறுதல்களை ஏற்றுக்கொள்ளவும் முடியும். இதனால் ஏற்படும் மற்றொரு நன்மை என்னவெனில், அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களும், அலுவலங்களும், தங்களைப் பற்றிய விவரங்கள் மக்களுக்கு இணையதளத்தில் கிடைக்குமாறு உறுதி செய்யும் என்பதுதான்.

(7) **வெளிப்படையான ஆதார மென்பொருள்:**

கணினி நிர்வாக முயற்சிக்கு மிகப்பெரிய அளவில் தேவையும், வாய்ப்பும் இருப்பதாலும், உலகமே ஒப்புக்கொள்ளும் வகையில் அதிக அளவிலான தொழில்முறை மென்பொருள் திறமை படைத்தவர்கள் இங்கே இருப்பதாலும், எங்கேயெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் வெளிப்படையான விதத்தில், மென்பொருள் தகவல் முறை மற்றும் தர நிர்ணயங்களை நடைமுறைப்படுத்துவது ஆகியவற்றைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.. இதனால், குறைந்த செலவில் தீர்வுகளை எட்டவும், அனைவரும்

பயன்பெறும்படி மென்பொருள் தகவல்திரட்டு மற்றும் தர நிர்ணயங்களை ஏற்படுத்த முடியும். இதனால், பணிகளுக்காக ஒப்பந்தப் புள்ளிகளை பல முறை கோருவதால் ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம்.

**8) சிறப்பு முதன்மைத் தகவல் தொழில்நுட்ப அதிகாரி (சிறப்பு சிஜடிஓ):**

ஒவ்வொரு மாநிலமும், மத்திய அரசாங்கத்தின் முக்கியமான பெரிய துறைகளும் தேவையான விஷயங்களில் நிபுணத்துவம் வாய்ந்தவரும் தகவல் தொழில்நுட்பத்தை நன்கு உபயோகிக்கும் திறனும் உடையவரும், தனது பொறுப்புகளை நிறைவேற்றத் தேவையான அதிகாரங்களைக் கொண்ட ஒரு முதன்மைத் தொழில் நுட்ப அதிகாரியை நியமிக்க வேண்டும். இந்தப் பதவிகளுக்கான நபர்களைப் பொதுவான ஆள்சேர்ப்பு முறையைப் பயன்படுத்தி, அகில இந்திய அளவில் தொழில்நுட்பத் துறையில் தலைசிறந்த வல்லுநர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த அதிகாரிகளுக்கு வெளிச்சந்தைக்கு ஈடான சம்பளம் வழங்கி, ஒப்பந்த பணிக்காலம் மூன்று வருடங்கள் என்று அரசுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.. அவர்களது செயல்திறனின் அடிப்படையில் ஒப்பந்த காலம் அரசாங்கத்தால் புதுப்பிக்கப்படலாம்.

**9) புதிய தேசியத் திட்டங்கள்**

அரசாங்கம், பாரத நீர்மாண் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றிற்கு, பல நூறு கோடி ரூபாய்களை செலவழிக்க திட்டமிட்டுள்ளதால்,. இவற்றில் உள்ள ஒவ்வொரு திட்டங்களின் செயல்பாட்டு முறைகளின் ஆரம்பத்திலும், மிகச் சரியான முறையில் தயாரிக்கப்பட்ட கணிணி நிர்வாக முறையில், அவற்றின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தவும், இணையதளத் தொடர்புகள் ஏற்படுத்துவதன் மூலம், திட்டங்களின் பலன் விரைவாகக் கிடைக்கவும், திட்டத்தின் மூலமான உற்பத்தித்திறன் அதிகரிக்கவும் உறுதிசெய்ய முடியும்.

திட்டத்தின் பலன்கள் சென்றடைவதில் முன்னேற்றம் காணவும், திட்டச் செயல்பாட்டிலுள்ள பிரச்சினைகளைக் குறைக்கவும் புதிய முறைகளை ஏற்படுத்துவதற்கும் இவை தொடர்புடைய கணிணி நிர்வாக அடிப்படைக் கட்டுமானத்தை உண்டாக்குவதற்கும் தேசிய அளவிலான திட்டங்களுக்காக ஒதுக்கும் நிதியில் ஒன்று அல்லது இரண்டு சதவிகிதத்தை இதற்காக முதலீடு செய்யலாம் என்று பரிந்துரை செய்யப்படுகிறது.

**(10) ஒன்றிணைக்கப்பட்ட செயல்முறைகள்**

தேசிய அளவிலான கணினி நிர்வாக முறை வெற்றி பெற வேண்டுமானால், அதற்கு ஏற்றவகையில், இலக்கு வைத்து செயல்படக்கூடிய அமைப்புகள் கொண்ட மத்திய அரசு அமைப்பு ஒன்று சுயேச்சையாகச் செயல்பட்டுப் பொறுப்பேற்கும் விதத்தில் உருவாக்கப்பட வேண்டும். இந்த அலுவலகம், ஒரு தலைமை நிர்வாக அதிகாரி (தநிஎ)யின் தலைமையில் தகவல் தொழில் நுட்பத் துறை மற்றும் அரசுத் தரப்பை சேர்ந்தவர்களைக் கொண்ட நிர்வாகக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும். இவர்கள் சேர்த்து, முறைகள்/நடைமுறைகளை மறுசீரமைப்பு செய்யவேண்டும். அது மட்டுமின்றி தேசிய அளவிலான கணிணி நிர்வாகத்தை தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப

அமைச்சகத்துடன் இணைந்து செயல்படுத்துவார்கள். இந்த அமைப்பின் செயல்பாடுகள் பின்வருவனவாகவும் அதைத் தாண்டியும் இருக்கலாம்:

(அ) நடைமுறைச் செயல்படுகள் சம்பந்தப்பட்ட நிர்வாகச் சீரமைப்பு

(ஆ) கணினிநிர்வாகத்திற்காக பொதுவான தேசிய அளவிலான தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்குவதும் அதைப் பராமரிப்பதும்

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை மையமாக வைத்து செயல்படுத்தப்படும் திட்டங்களை உடனடி மையப்படுத்தலின் மூலம் அவற்றிற்கான வழிகாட்டல் மற்றும் நடைமுறைப்படுத்தக் கூடிய கட்டமைப்பை உருவாக்குதல்.

(ஈ) சிஐடி ஓ-வினரின் உதவியோடு கணினி நிர்வாகத்திற்குத் தேவையான மற்றும் தர நிர்ணயங்களை உருவாக்க நடுநிலைப் போக்குள்ள ஆலோசனை கட்டமைப்பை உருவாக்குதல். நமது அடிப்படை நிர்வாக முறைகளில் உள்ள நடைமுறைகளில் மாறுதலை ஏற்படுத்துவது அவசியத் தேவையாகும் அப்போதுதான் நிர்வாகத்தில் எளிமை, வெளிப்படையான செயல்பாடு, உற்பத்தித்திறன் மற்றும் திறமை ஏற்பட வழிவகை பிறக்கும் அரசு மக்களுக்கு அளித்துக் கொண்டிருக்கும் சேவைகளில் 10-20 முக்கியச் சேவைகளில் மேற்படி மாற்றங்களை ஏற்படுத்தி, அவைகளை இணையதளம் மூலம் பயன்பெறுபவர்களுக்குச் சென்றடையுமாறு செய்தல்; இவற்றுக்காக, பொதுவில் தர நீர்ணயங்களை உருவாக்கி, கணினி நிர்வாகத்தை குடிமக்களை மையப்படுத்தும் வகையில் உள்கட்டமைப்பை ஏற்படுத்துவது.

அடுத்த கட்ட நடவடிக்கையான என்கேசி-யின் பரிந்துரைகள், நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மையப்படுத்துவதாக உள்ளது. இவைகளில் உள்ள அரசுச் செயல்பாடுகளில், ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் கூடிய தலைமை, சுயேச்சையாகச் செயல்படும் தன்மை, வளைந்து கொடுக்கும் தன்மை, நோக்கத்தைக் குறித்த தெளிவு ஆகியவற்றுடன் செயல்படும் விதத்தில் புதிய மாற்றங்களை உருவாக்குவது, முன்னரே வரையறுக்குப்பட்ட மற்றும் நிறைவேற்றப்படக்கூடிய விஷயங்கள், குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் அவ்வப்போது கண்காணித்தல் ஆகியன கணினி நிர்வாகத் திட்டத்தை மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்குள் நிறைவேற்றப் பேருதவியாக இருக்கும்.